ராணி
காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
இரட்டை
துப்பாக்கி
ரூ.
3

திருக்குறள் முரசு

திருக்குறளே உலகுக்குப் பரிசு — திக்கெட்டும்
முழங்கிடும் அறிவாற்றல் முரசு (திருக்குறளே)

ஈராயிரம் ஆண்டுக்கு முன்னே
எடுத்துரைக்கும் திறத்தோடு சொன்ன
அறிவுடையார் எல்லாம் உடையார் என்ற
அற்புத தெய்வத் தமிழ் மறையாம் (திருக்குறளே)

களர் நிலமாவார் கல்லாதார் — நல்ல
விளை நிலம் போன்றார் கற்றார் — என்று
கல்வியின் பெருமைதனைச் சொல்லி
கல்லாமையின் இழிவுதனை எடுத்துரைக்கும் (திருக்குறளே)

—கடம்பூர் புலவர் கோ. சுவாமிநாதன்

மாணவர்களுக்கு ரூ. 6 ஆயிரம் பரிசு!

மாணவ – மாணவிகளே!

அடுத்த வகுப்புக்கு போகப் போகிறீர்கள்!

புதிதாகப் புத்தகம்- நோட்டுகள் வாங்க வேண்டுமே? அதற்கு உங்களுக்கு உதவி செய்ய "ராணி காமிக்ஸ்" முன்வந்திருக்கிறது!

உங்களுக்கு
ரூ. 6 ஆயிரம்
கொடுக்கப்படும்!

முழுவிபரத்துக்கு அடுத்த (மே-1) "ராணி காமிக்ஸ்" பாருங்கள்.

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
"மாயக்காரி"

என்ற மர்மப் படக்கதை அடுத்த "ராணி காமிக்ஸ்"சில் இடம் பெறுகிறது!

ராணி காமிக்ஸ் – 308
(மாதம் இருமுறை இதழ்)
TV
ஏப்ரல் 16 – 30
1997



முகமூடி வீரர் **மாயாவி** தோன்றும்

இரட்டைத் துப்பாக்கி

டயானா காட்டில் உள்ள மரவீட்டில் மாயாவியுடன் தன் இரட்டைக் குழந்தைகள் கிட், கிலாயுசுடன் வாழ்ந்து வந்தாள்.
தினமும் அங்கிருந்தபடியே அலுவலகத்துக்கு சென்றுவந்தாள்.
காட்டில் இருந்து அலுவலகம் போக டயானாவுக்கு ஒரு மணி நேரம் ஆகும்.
டயானா அலுவலகம் வந்தாள்.
டயானா! இவர் பயங்கர காயங்களோடு உனக்காக காத்திருக்கிறார்!
ஐ.நா. மனித மேம்பாட்டுக்கழகம், இயக்குநர். டயானா பால்மர்வாககர்,
அச்...அச்...! அச்...!
என்னாச்சு!

உக்லாண்டாவில் நடக்கும் கொடுமைகளை நிருபிக்க இவர் ஆதாரங்களை கொண்டு வந்திருக்கிறார்!
நான் ஏற்கனவே கேள்விப் பட்டிருக்கேன்!
நோயாளியை அதிக நேரம் தொந்தரவு செய்யக் கூடாது!
டயானா அந்தப் பெரியவரை காண மருத்துவமனைக்கு வந்தாள்.
என் மக்களை அந்த கொடுமைக்காரப் பாவியிடமிருந்து காப்பாற்று!
முயற்சி செய்கிறேன்!
வெளியே சென்று இருந்த மாயாவி வீட்டுக்கு திரும்பிக்கொண் டிருந்தார்
என் பிள்ளைகள் எனக்காக காத்திருப்பார்கள்!
அந்த மிருகத்திடம் இருந்து மக்களை காப்பாற்று! அச்...அச்...ஆ...!
சற்றுத் தள்ளுங்கள்!

டயானா உனக்காகவே உயிரை பிடித்து வைத்திருந்தார் போலிருக்கிறது!
அப்படியா?
அந்தப் பெரியவர் கொடுத்த ஆதாரங்களை வைத்து உக்லாண்டாவுக்கு எதிராக செயல்படப் போகிறாய்?
ஆமாம்!
நான் டயானா! ஜனாதிபதியை சந்திக்க வேண்டும்!
வாருங்கள் மேடம்!
ஜனாதிபதி லூகாவை டயானா சந்தித்து ஆதாரங்களை கொடுத்தாள்.
உக்லாண்டாவின் ஜெனரல் கொலை கொள்ளைகளில் ஈடுபட்டு வருவது ஆபத்தானது!
இந்த ஆதாரத்துக்கு என்ன சொல்கிறீர்கள்?
டயானா! உக்லாண்டாவுக்கு எதிரான ஆதாரங்களை வைத்து என்ன செய்யப் போகிறாய்?
நியூயார்க் செல்லப் போகிறேன்!

ஐ.நா. சபை செயலாளரையும் பத்திரிகைகாரர்களையும் சந்தித்து உக்லாண்டாவின் கொடுமைகளை வெளிச்சத் துக்கு கொண்டுவரப் போகிறேன்!
உக்லாண்டா இதற்கு பொறுத்துக்கொள்ளாது! ஆபத்தில் முடியும்!
அதைப்பற்றி எனக்கு கவலையில்லை!
உன்னை நினைக்க பயமாக இருக்கிறது! உதவிக்கு என் ஆட்களை அனுப்பு கிறேன!
வேண்டாம்! என்னை யாரும் எதுவும் செய்துவிட முடியாது!
சரியான பாதுகாவலனைத்தான் மணமுடித்திருக்கிறாய்! உனக்கு எதற்கு பாதுகாப்பு!
இதை நான் தனியாகவே சந்திக்கப் போகிறேன்!
இதோ அவள்தான்! ஏன் தடுக் கிறாய்?
இல்லை தூதரிடம் இருந்து நமக்கு உத்தரவு வர வில்லையே?

நான் நாளை நியூயார்க் செல்கிறேன்! செயலாளரிடம் நேரம் குறித்து வாங்குங்கள்!
டயானா! உக்லாண்டாவின் தூதர் உன்னைச் சந்திக்க வேணடுமாம்! முடியாதுன்னு சொல்லிவிடவா!
வேண்டாம்! சந்திக்கிறேன் என்று சொல்!
டயானா மாவிட்டானில் உள்ள உக்லாண்டா நாட்டு தூதரகத்தில் இருக்கும் தூதரை சந்தித்தாள்!
நீ என் தலைவருக்கு எதிராக செயல் படுகிறாய். அதை நிறுத்திக்கொள்! எச்சரிக்கை செய்கிறேன்!
நிச்சயமாக முடியாது!
என் தலைவருக்கு எதிராக சதி செய்து ஆதாரங்களை திரட்டியிருக்கிறாயாமே?
என்னிடம் இருப்பது உண்மையான ஆதாரங்கள்!

எங்களுடன் நீ ஒத்துழைப்புக் கொடுத்தால் நீ பணக்காரியாகி விடலாம்!
எனக்கு புரிய வில்லையே?
நீ நியூயார்க் செல்வதை நிறுத்த வேண்டும். என் தலைவருக்கு எதிராக நீ செயல்படக் கூடாது! இதைச் செய்தால் நீ பணக்காரி யாகிவிடுவாய்!
எவ்வளவு பணம் கொடுப்பீர்கள்?
மாதா மாதம் சுவிஸ் வங்கியில் நிறைய பணம் போடுகிறோம்! தொகை நிரப்பப்படாத காசோலை தருகிறோம்!
அதுமட்டுமா? இந்த வைர நெக்லசும் உனக்குத்தான்!
உன் தலைவர் ஒரு பெண்ணை எப்படியெல்லாம் கவுரவிக்கிறார்!
உனக்கு திருப்தி தானே?

தூதரே! உங்கள் தலைவர் செய்த துரோகம், அநியாயம், அக்கிரமங்களுக்கெல்லாம் என்னிடம் ஆதாரம் இருக்கிறது!
!
நியூயார்க் சென்று செயலாளரிடம் காட்டி உங்கள் வண்டவாளத்தை தண்ட வாளத்தில் ஏற்றாமல் விடமாட்டேன்!
டயானா கோபமாக பேசிவிட்டு வெளியேறினாள்.
நான் சொன்னது இவளைத்தான்! நேரம் பார்த்து...
நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!
தூதர் என்ன சொன்னார்?
அவன் என்னை மிரட்டிப் பார்க்கிறான்!
இது ஆபத்தானது!

இன்று இரவு அந்த ஆதாரத்தை விமான நிலையம் கொண்டுவா! நான் வீட்டுக்குச் சென்று குழந்தைகளை பார்த்து வருகிறேன்!
டயானா காட்டு வீட்டுக்கு புறப்பட்டாள்.
அதோ அவள் புறப் பட்டுவிட்டாள்.
காட்டுச் சாலையில் டயானாவின் கார் வந்தது.
??
தலைவருக்கு அவள் உயிரோடு வேண்டும்!
என்ன வேண்டும்?
காரைவிட்டு வெளியே வாம்மா!
U.N. 207

டயானா காரில் இருந்து துப்பாக்கியை எடுத்துக்கொண்டு இறங்கினாள்.
அருகே வராதீர்கள். வந்தால் என் துப்பாக்கி வெடிக்கும்!
ஆனால் பின்னால் ஒருவன்—
ஏய்... துப்பாக்கியை கீழே போடு!
!
?!
படார்!
அதற்குள் அவசரப்பட்டால் எப்படி?
ஒரே வெட்டு!
அம்மா...!
டயானா அவனை மடக்கினாள்.


அதற்குள் இன்னொருவன் டயானாவை பிடித்தான்.
இவள் காட்டுப் புலி! சிக்கிரம் பாட்டிலை எடு!
பாட்டிலில் இருந்த மயக்க மருந்தை துணியில் கொட்டி அவள் முகத்தில் அமுக்கினார்கள்.
டயானா மயக்கத்திலும், மாயாவியையும் குழந்தைகளையும் நினைத்தாள்.
அவள் மயங்கியதும் ஜீப்பில் அவளை ஏற்றினார்கள்.
டயானாவின் காருக்கு வெடி வைத்தார்கள்.
டமார்!
கார் வெடித்து சிதறியது.

அதே நேரம்— மாயாவி மரவீட்டுக்கு வந்தார்.
அலோ...!
அய்... அப்பா...!
மாமா வந்து விட்டார்!
அம்மாவை எங்கே
இன்னும் வரவில் லையே?
டயானா இன்று இரவு நியுயார்க் செல்கிறார்களாம்! அலுவலகத்தில் இருந்து போன் செய்தார்கள்!
நான் இங்கு வருவது அவளுக்குத் தெரியாது! ஆச்சரியமாக இருக்கும்!
ஆச்சரியமா?
அதே நேரம்— டயானாவின் ஜீப் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது.

விஷக் குள்ளர்கள் டயானாவின் ஜீப்பை பார்த்தார்கள்.
இது டயானாவுக்கு சொந்தமான தாயிற்றே!
மாயாவி குழந்தைகளுக்கு கதை சொல்லிக்கொண்டிருந்தார்.
அப்பா! அம்மா எப்பப்பா வருவார்கள்?
டயானா விரைவில் வந்துவிடுவதாக கூறினார்களே?
டயானா புறப்பட்டு 3 மணி நேரம் இருக்குமே?
3 மணி நேரமா?
அங்கிருந்து ஒரு மணி நேரத்தில் வந்துவிடலாம் அல்லவா?
??

மாமா! டயானாவுக்கு என்னவோ ஆகி விட்டது!
இரவு நியூயார்க் போவதால பொருட்கள் வாங்க கடைவீதிக்கு போயிருக்கலாம்!
அப்போது— டயானாவின் ஜீப்பை பார்த்த விஷக் குள்ளர்கள் வந்தார்கள்.
மாயாவி! மாயாவி!
மாமா! அவர்கள் என்ன சொல்கிறார்கள்?
ரெக்ஸ்! குழந்தையை பார்த்துக்கொள்! நான் இப்போது திரும்பி வருகிறேன்!
மாயாவி குதிரையில் ஏறி புறப்பட்டார்
டயானாவின் ஜீப் எரிந்து கொண்டிருக்கும் இடத்துக்கு வந்து பார்த்தார்.

இது டயானாவின் ஜீப்தான்!
வேறு ஏதோ வாகனம் இங்கு வந்த அடையாளம் தெரிகிறது!
ஆனால் டயானாவை எங்கே?
காட்டிலாகா தலைமை அலுவலகம்.
கலோனல்! உங்களுக்கு அவரிடம் இருந்து போன்!
வழக்கமாக வயர்லெசில்தானே வருவார்!

மாயாவி தொலைபேசி கம்பத்தில் இருந்து பேசினார்.
டயானா விபத்துக்குள்ளாகி இருக்கிறாளா என்று காவல் நிலையம், மருத்துவமனைகளிலும் விசாரித்து வைக்கவும். 30 நிமிடத்தில் தொடர்பு கொள்ளுகிறேன்!
அரை மணி கழித்து
சார்! எல்லா காவல் நிலையம், மருத்துவமனையிலும் விசாரித்து விட்டேன்.
டயானாவுக்கு எந்த விபத்தும் நேரவில்லை என்கிறார்கள்!
டயானாவுக்கு விபத்து நேரவில்லை! ஆனால் கார் எரிகிறது அவளையும் காணவில்லை!
மாயாவி டயானா அலுவலகத்துக்கு போன் செய்து விசாரித்தார்.
நான் டயானாவின் உதவியாளர் மேரி பேசுகிறேன்! இரவு விமான நிலையத்துக்கு உக்லண்டாவின் ஆதாரங்களோடு என்னை வரச் சொன்னார்!
நீ விமான நிலையம் போக வேண்டாம்! அவளுக்கு ஏதோ விபத்து நேர்ந்திருக்கிறது!

விபத்தா? என்ன சொல்கிறீர்கள்?
அதை விவரிக்க நேரமில்லை!
நீயும் அலுவலகத்தில் உள்ளவர்களும் பழைய காட்டுச் சாலைக்கு வாருங்கள்!
மறந்துவிடாதே! பழைய காட்டு சாலைக்கு வாருங்கள்!
அலோ...! அலோ...!
டயானாவின் உதவியாளர் பேசுகிறேன்! ஜனாதிபதியுடன் பேசவேண்டும்!
சார்! டயானாவுக்கு ஏதோ விபத்து என்று அவரது கணவர் சொன்னார்!
டயானாவுக்கா? என்னாச்சு!

டயானாவின் கணவரை நாங்கள் பழைய காட்டு சாலையில் சந்திக்க வேண்டுமாம்! நாங்கள் அவரை பார்த்ததேயில்லை!
பரவாயில்லை! அவர் கூறியபடி காட்டுச் சாலைக்கு போய் வந்து எனக்கு தகவல் கொடு!
டயானா அலுவலக ஊழியர்கள் காட்டுச் சாலைக்கு விரைந்தார்கள்.
அவர் சொன்ன இடம் இதுதானே?
நம்மை சந்திக்க அவர் ஏன் இந்த இடத்தை தேர்ந்தெடுத்தார்!
இப்போது என்ன செய்வது?
எதிரே ஒரு கார் நிற்கிறதே?
உங்களுக்கு எதிரே இருப்பது டயானாவின் கார்! உங்கள் கார் விளக்குகளை அணையுங்கள்!
இருட்டில் மாயாவியின் குரல் மட்டும் கேட்டது.

டயானா கார்
நிற்கிறது! அவளை
எங்கே?
டயானா தனியே காட்டுப்
பாதையில் காரில் போவது
எங்களுக்குப் பிடிக்க
வில்லை!
காட்டில் வாழும்
மிருகங்களினாலோ,
மனிதர்களாலோ
டயானாவுக்கு
ஆபத்து இல்லை.
வெளியில்
இருப்பவர்களால்
தான் ஆபத்து
நேர்ந்திருக்கிறது!
வாக்கர்! இருட்டில்
உங்களை பார்க்க
முடியவில்லை!
உங்களிடம் சில
கேள்விகளுக்கு
பதில் வேண்டும்!
டயானா நியூயார்க் போய் உக்லாண்டா பற்றி
ஐ.நா. செயலாளரிடம் புகார் செய்யப்
போகிறாள்! உண்மைதானே?
அவர்
எங்கே
இருக்கிறார்?

டயானா இன்று ஜனாதிபதி லூகாவையும், உக்லாண்டு தூதரையும் சந்தித்தாள்!
தூதர் டயானாவை மிரட்டியிருக்கிறார்.
டயானாவை எப்படி மிரட்டி னானாம்?
டயானா அதுபற்றி விபரம் சொல்லவில்லை!
நான் அழைத்து இங்கு வந்தமைக்கு மிக்க நன்றி!
சார்! டயானா உயிருக்கு ஆபத்து இல்லையே?
அந்த அளவுக்கு நான் விடமாட்டேன்!
சார்! நகரில் உள்ள மருத்துவமனை, காவல் நிலையம், காட்டு இலாகா வினரிடம் விசாரித்து விட்டோம்! டயானா விபத்து பற்றி பதிவாக வில்லை!
சரி, கலோனலிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொடு!

டயானாவுக்கு என்ன நடந்திருக்கும்? அவளை யார் கண்டு பிடிப்பது?
ஜனாதிபதி! அவளை கண்டுபிடிக்க நான் முயற்சிக்கிறேன்!
மாயாவி திரைமறைவில் இருந்து வெளியே வந்தார்.
டயானாவுக்கு விபத்து என்று நீதான் கூறினாயா? அதற்கு என்ன அர்த்தம்?
விபரமாக சொல்கிறேன்!
காட்டுச் சாலையில் டயானாவின் கார் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்ததை பார்த்தேன்!
டயானா இருந்தாளா?
அவள் இல்லை!

அந்த இடத்தில் இன்னொரு கார் வந்து போனதற்கான அடையாளம் இருந்தது!
விபத்து எதுவும் நேரவில்லை!
அப்படியானால் அவளை தாக்கியது யார்?
உக்லாண்டாவின் ஆட்களாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன்!
ஏன்?
டயானா உக்லாண்டாவின் அதிபர் கான் மனிதர்களுக்கு ஏற்படுத்திய கொடுமைகளை ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்ட புறப்பட்டு விட்டாள்!
அவளிடம் ஆபத்தான வேலைகளில் இறங்காதே என்று ஏற்கனவே எச்சரித்திருக்கிறேன்!

கான் உலக வங்கியில் கடன் கேட்டு முயற்சி செய்கிறான். இந்த நேரத்தில் டயானா அந்த ஆதாரங்களை காட்டினால்... பணம் கிடைக்காது! அதை தடுக்கத்தான் டயானாவை கடத்தியிருக்க வேண்டும்!
அவளை எப்படியும் கண்டுபிடித்தாக வேண்டும்!
அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!
முதலில் உக்லாண்டா தூதரை சந்திக்க வேண்டும்!
உக்லாண்டா தூதரகம்—
பிரச்சினையில்லாமல் அவளை கடத்தி விட்டோம்!
உக்லாண்டா தூதரகத்தில் மின்சார வேலி, பாதுகாப்பு கோட்டை, கொலைகார நாய்கள் என்று பாதுகாப்பு அதிகமாக இருக்கும்!
அவற்றை நான் சமாளித்துக் கொள்கிறேன்! வருகிறேன்!

மாயாவி சாதாரண உடையில் புறப்பட்டுச் சென்றார்.
மின்சார வேலி, பாதுகாப்பு கோட்டை, கொலைகார நாய்கள்... இவையெல்லாம் எனக்கும் டெவிலுக்கு தூசிக்கு சமம்!
உக்லாண்டா தூதரகம்
முன்பக்க வாசல் வழியே செல்வது நல்லது.
நான் தூதரை சந்திக்க வேண்டும்!
இரவு 2 மணி தெரியுமல்லவா? குடித்துவிட்டு உளர்கிறாயா?
நானா குடித்திருக்கிறேன்? அங்கே பார்!
அடிக்கடி அடிதான் உதவுகிறது!


மாயாவி காவலாளியை தாக்கிவிட்டு உள்ளே நுழைந்தார்.
அதோ... கொலைகார நாய்கள்!
லொள்...!
லொள்...!


மாயாவியைப் பார்த்ததும் நாய்கள் கொலை வெறியுடன் பாய்ந்தோடி வந்தன.

எதிரிகளை கடித்துக்குதற பழக்கியிருக்கிறார்கள்! டெவில் இவைகளை நீயே கவனி!

டெவில் பாய்ந்தோடி கொலைகார நாய்களை மூர்க்கத்தனமாக தாக்கியது.
ர்..ர்..
கொலைகார நாய்கள் டெவிலிடம் தாக்குப்பிடிக்க முடியாமல் ஓடிச் சென்றன.
பாதுகாப்பு கோட்டையில் இருந்த காவலாளி சத்தம் கேட்டு வாசலைப் பார்த்து அதிர்ந்தான்.
?!
உடனே அவசர அழைப்புமணியை அழுத்தினான்.

அழைப்புமணி ஒலித்ததும் தூதர் விசாரித்தான்.
ரிங்.... ரிங்....
ரிங்...!
கேப்டன் என்ன நடந்தது?
சார்! முன்பக்க வாசலில் இருந்த காவலாளி தாக்கப் பட்டிருக்கிறான்!
கேப்டன்! இவன் தாடையில் என்ன?
தெரியவில்லை! முதலில் அவனை உள்ளே தூக்கி வா!
யாரோ இவனை தாக்கிவிட்டு உள்ளே நுழைந்திருக்கி றார்கள்!
தாடையில் ஏதோ குறி இருக்கிறது!
மண்டை ஓட்டுக் குறி!

டெவில்! நீ இங்கேயே இரு! நான் தூதரை சந்தித்து விட்டு வருகிறேன்!
தூதரின் அறைக் கதவு தட்டப்பட்டது.
தட்...! தட்...!
?
தூதர் கதவை திறந்தார். மாயாவியால் தாக்கப்பட்ட காவலாளி மயங்கி விழுந்தான்.
தூதர் உடனே கேப்டனிடம் தொடர்புகொள்ள முயன்றார்.
கேப்டன்!
ஆமாம்... நான் தூதர் பேசுகிறேன்!
பின்னே இருந்து ஒரு கை தூதரின் வாயைப் பொத்தியது.

மாயாவி அவன் கையில் இருந்த போனை வாங்கி கீழே வைத்தார்.
ஏய்... யார் நீ?
ஏய்... என் ஆட்களுக்கு குரல் கொடுத்தால் போதும், நீ பிணமாகிவிடுவாய்!
நீ தவறாக சொல்கிறாய்? நான் சொல்வதை நீ செய்யாவிட்டால் முதலில் நீ பிணமாகி விடுவாய்!
உனக்கு பணம் வேண்டுமா?
பணம் தேவையில்லை! எனக்கு டயானா வேண்டும்?
யாரது?

டயானாவா? அவளை எனக்குத் தெரியாது!
அவளை நீ பார்த்தது இல்லையா?
உண்மையிலேயே டயானாவை எனக்குத் தெரியாது!
யோசித்துப் பார்!
படார்!
இன்னும் நினைவு வர வில்லையா? இப்பொழுது வந்துவிடும்!
மாயாவி தூதரை தூக்கி நச்சென்று சுவரில் மோதினார்..
சார்! உங்களுக்கு ஒன்றும் இல்லையே?
எனக்கு எதுவுமில்லை என்று சொல்!
எனக்கு எதுவுமில்லை!

டயானா நேற்று இங்கு வந்திருக்கிறாள்! உன் தலைவர் பற்றிய ஆதாரங்களை ஐ.நா: சபைக்கு கொடுக்கக்கூடாது என்று மிரட்டியிருக்கிறாய்!
இல்லை!
மரியாதையாக உண்மையை சொல்லிவிடு!
படார்...!
ஆ...!
நேற்று டயானாவை யாரோ கடத்தி யிருக்கிறார்கள்! யாருடைய வேலை இது?
எனக்குத் தெரியாது!
அவளை எங்கே?
எனக்கு எதுவும் தெரியாது!
மாயாவி தூதரை தலைமேலே தூக்கி வீச முயன்றார்.
அய்யோ! என்னை விட்டு விடு. உண்மையைச் சொல்லி விடுகிறேன்!
உண்மை எனக்கு வேண்டும்!

நடந்ததை மறைக்காமல் சொல்!
ஆ...!
இதோ இவர்தான் டயானாவை கடத்த எனக்கு கட்டளை யிட்டார்!
அவள் இப்போது எங்கே இருக்கிறாள்?
அதேநேரம்— டயானா சென்ற விமானம் உக்லாண்டாவில் தரை இறங்கியது.
உன் தலைவர் கான் சரியான காட்டுமிராண்டி! மரியாதையாக டயானா சென்ற விமானத்தை திரும்பி வரச்சொல்!


இந்நேரம் விமானம் தரை இறங்கி யிருக்குமே?
விமானிக்கு தகவல் கொடுத்து திட்டம் மாறிவிட்டது என்று சொல்!
உக்லாண்டா விமான நிலையத்துடன் தொடர்பு கொண்டார்.
மாவிட்டான் விமானம் வந்து விட்டதா?
டயானா திரும்பி வரவேண்டும்!
விமானம் தரை இறங்கி 5 நிமிடம் ஆகிவிட்டது! பயணிகள் இறங்கிச் சென்று விட்டார்கள்!
டயானா விமானத்தில் இருந்து இறங்கி விட்டாளாம்!
அடுத்த விமானத்தில் அவளை அனுப்பி வைக்கச் சொல்!
அது முடியாது! கான் அங்கே டயானாவுக்காக காத்திருக்கிறார்!
சார்! இவளுக்கு மயக்க மருந்து கொடுத்திருப்பதால் விரைவில் எழுந்துவிடுவாள்!
இவளை என் இடத்துக்கு கொண்டுசெல்லுங்கள்!

கான் டயானாவுக்காக விமான நிலையத்தில் ஏன் காத்திருக்கிறார்?
டயானா அவருக்கு எதிராக செயல்படுவதால்! அழகாக வேறு இருக்கிறாளே!
டயானாவை திரும்ப இங்கே கொண்டுவர முடியுமா முடியாதா?
கானுக்கு எதிராக செயல்படுவதை நிறுத்தினால் வரலாம்!
உக்லாண்டாவில்—
இன்னுமா அவளுக்கு மயக்கம் தெளிய வில்லை?
இன்னும் சில நிமிடங்களில் கண் விழித்துவிடுவாள்!

அதேநேரம் மாவிட்டானில்— டயானா அலுவலகத்தில்—
படார்...!
ஆ...!
இரண்டு பேர் டயானா அலுவலகத்துக்குள் நுழைந் தார்கள்.
இதோ உக்லாண்டா பற்றிய கோப்பு!
அதுதானா என்று நன்றாக பார்த்துக்கொள்!
சார்! வந்த காரியம் முடிந்தது!
அது இருக்கட்டும்! உடனே உன் தலைவருடன் தொடர்பு கொள்!
என் ஆட்கள் டயானா அலுவலகத்தில் இருந்து கானைப் பற்றிய கோப்பை எடுத்துவிட்டார்கள்!
அதேநேரம்— டயானாவுக்கு மயக்கம் தெளிந்தது.
கண்விழித்ததும் கடைசியாக காட்டுச் சாலையில் ஒருவனுடன் மோதியது நினைவுக்கு வந்தது.

நான் எங்கு இருக்கிறேன்!
ஆகா! அழகுதேவதை கண்விழித்துவிட்டாள்!
நான்தான் உன்னை கடத்தி வந்தேன்!
உனக்கு எதிராக ஆதாரங்களை திரட்டியதால் என்னை கடத்தியிருக்கிறாயா?
ஆதாரம் எல்லாம் பொய்! என் எதிரிகள் எனக்கு உலக வங்கியில் பணம் கிடைக்கக்கூடாது என்பதற்காக செய்த சதி!
இல்லை! அனைத்தும் உண்மையான ஆதாரம்!
உன் ஆதாரங்களை எல்லாம் நான் அழித்துவிட்டேன்! உன்னிடம் எதுவும் இல்லை!
!!

எதிரிகள் என்னை காட்டுமிராண்டி என்பார்கள். உன்னை பார்த்ததில் இருந்து நான் மாறி விட்டேன்!
டயானா! வா என் அருகில் வா!
மரியாதையாக கையை எடு!
டயானா காலை தூக்கிப் பந்தாடினாள்.
இது எப்படி இருக்கு!
ஆ... காவலாளிகள் எங்கே போய் தொலைந்தீர்கள்?
!!

ஆ... என் முதுகு போச்சு!
தலைவரே!
டிரிங்... டிரிங்...!
அப்போது தொலைபேசி அழைத்தது.
தலைவரே! மாவிட்டான் தூதர் உங்களுடன் அவசரமாக பேசவேண்டுமாம்.
இரு வருகிறேன்!
அப்படியா? வெரிகுட்!
சார்! அதைவிட இனிப்பான செய்தி!
விரைவாகச் சொல்!
சார்! நீங்கள் வங்கியில் கேட்ட பணத்தைவிட மூன்று மடங்கு அதிகமாக தர டயானா ஏற்பாடு செய்திருக்கிறாள்!

மும்மடங்கு பணமா?
அதுவும் தங்கமாக கிடைக்கும்!
ஆனால் அவளுக்கு எந்த ஆபத்தும் நேரக்கூடாது!
இதை திருப்பிச் சொல்!
இந்த பெண்ணுக்காக அவ்வளவு பணம் தருகிறவன் யார்?
நாளை அந்தத் தங்கம் நமக்கு கிடைத்துவிடும்!
ஆனால் அவள்மேல் ஒரு கீறல் கூட விழக் கூடாதாம்!
இல்லை! அவளை நான் தொடககூட மாட்டேன்!
அது யாராக இருக்கும்?

அவளுக்காக தங்கம் கொடுக்கப் போகிறது யார்?
அவர் ஒரு கோடீசுவரர் சார்!
அவருடைய பெயர் என்ன?
வாக்கர்!
வாக்கர் சார்!
அவர் பெயர் வாக்கராம்!
வாக்கரா?
!!
பெயரைக் கேட்டதும் டயானா மகிழ்ந்தாள்.
சார்! அவர் டயானாவுடன் பேச ஆசைப் படுகிறார்!
என் மீது நம்பிக்கை இல்லையா?
அவளுடன் பேசத் துடிக் கிறார்!
ஏய்... இங்கே வா! அவருடன் பேசு!

டயானா! நான்தான்! உனக்கு ஆபத்து எதுவும் இல்லையே?
இல்லை! நன்றாக இருக்கிறேன்!
அவரது குரலை கேட்டதும்தான் நிம்மதி!
டயானா! பயப் படாதே! விரைவில் அங்கு வருகிறேன்!
விரைவாக வாருங்கள்!
போதும்! போனைக் கொடு!
கான் போனை வெடுக்கென்று பிடுங்கினான்.
சார்! அவருக்கு பரம திருப்தி!
இல்லை! அதற்குள் என் மனம் மாறி விட்டது!

ஆமாம்.! அவள் அழகுக்கு 30 இலட்சம் போதாது!
சார்! மனம் மாறிவிட்டீர் களா?
40 இலட்சம்!
40 இலட்சம் தருகிறாராம்!
இல்லை! எனக்கு ஒரு கோடி வேண்டும்!
ஒரு கோடிக்கு சம்மதித்துவிட்டார் சார்!
அப்படியா?
சார்! ஐவோரிலானா விமான நிலையத்தில் வைத்து தங்கத்தை கொடுத்துவிட்டு, டயானாவை அழைத்துக்கொள்கிறாராம்!

இல்லை! அவனை தங்கத்தை எடுத்துக்கொண்டு இங்கே வரச்சொல்!
சார்! அதற்கும் சம்மதித்துவிட்டார்!
தூதரே! அங்கேயே தங்கம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு அனுப்பு!
ஓ.கே. சார்!
என் விமானத்தை அனுப்புகிறேன்! அதில் அவரை தங்கத்துடன் அனுப்பி வை!
உனக்காக ஒரு கோடி ரூபாய் தரத் தயாராக இருக்கிறான் ஒரு முட்டாள்!

பைத்தியக்காரன்! வாக்கரிடம் இருந்து தங்கத்தைப் பெற்றுக்கொண்டதும் அவன் உடம்பில் தலை இருக்காது!
அவரிடம் அது நடக்குமா?
இவளை பாதாள அறையில் அடைத்து வை!
??
மாவிட்டானில்— பெட்டி தயாரானது.
பெட்டி நிறைய இந்த புத்தகத்தை அடுக்கி வை!
தலைவருக்கு தெரிந்தால் அவ்வளவுதான்
நீ எங்கே நழுவப் பார்க்கிறாய்? நீயும் என்னுடன் வருகிறாய்!
நானுமா?
ஆமாம்! முதலில் ஒரு காருக்கு ஏற்பாடு செய்! விமானமும் தயாராகட்டும்!

இந்த உடையில் ஒன்று எனக்கு வேண்டும்!
மாயாவி அங்கிருந்த உடையை எடுத்து அணிந்துகொண்டார்.
புத்தகம் நிரப்பப்பட்ட பெட்டி காருக்கு தூக்கிச் செல்லப்பட்டது.
கூடவே டெவிலும் ஏறிக்கொண்டது.
கார் விமான தளத்தை அடைந்தது.
எங்கே போக வேண்டும் சார்?
உக்லாண்டாவுக்கு!
நீ உன் மரணத்தை தேடிச் செல்கிறாய்?
பேசாமல் உட்கார்!
என்னையும் சேர்த்து அல்லவா மரணத்துக்கு அழைத்துப் போகிறாய்!
பயமாக இருக்கிறதா?

தூதர் ஒரு படத்தை எடுத்து காட்டினார்.
இது என் மனைவி மற்றும் குழந்தைகள்!
எனக்கு கொடுத்த வேலை முடியாவிட்டால், கான் என்னை கொன்றுவிடுவான்!
டயானா பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டாள்.
கான் என் குடும்பத்தை வீட்டுக் காவலில் வைத்திருக்கிறான்! வேலை முடியாவிட்டால், அவர்களையும் கொன்று விடுவான்!
விமானம் உக்லாண்டாவில் தரை இறங்கியது.
அடேயப்பா... பெட்டி என்னமாய் கனக்கிறது!
பேசாமல் முன்னே பார்த்து நட!

சார்! மாவிட்டானில் இருந்து விமானம் வந்துவிட்டது!
சரி! அவனை என் இடத்துக்கு அழைத்து வா!
இருவரையும் காரில் அழைத்துப் போனார்கள்.
பெட்டியில் இருப்பது புத்தகம் என்று தெரிந்தால் கான் மிருகமாகி விடுவான்!
ஏன் புத்தகம் படிக்க அவனுக்கு பிடிக்காதா?
மாயாவி கான் முன் கொண்டுவரப்பட்டார்.
வாரும் தூதரே! வாக்கர் தங்கம் சரியாக இருக்கிறது அல்லவா?
தூதரே! தங்கத்தை சரிபார்த்துவிட்டீரா?
ஆமாம் தலைவரே! சரியாக இருக்கிறது!

இங்கே இனி பேச்சுக்கு இடமில்லை!
நான் டயானாவை பார்க்க வேண்டும்!
என் காவலாளிகள் உன்னை அவள் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்வார்கள்!
நான்தான் நீ சொன்னபடியே தங்கம் கொண்டுவந் திருக்கிறேனே?
தங்கம் கொடுத்தால் அவளை அனுப்பிவிட வேண்டுமா? இவனை இழுத்துச் செல்லுங்கள்!
சார்! காரியத்தை முடித்துவிட்டேன்! என் மனைவி பிள்ளைகளை ஒன்றும் செய்து விடாதீர்கள்!
தூதரே! 5 நிமிடம் பொறும்!

ஏய்... இன்னுமா அவனை இழுத்துச் செல்ல வில்லை?
சார்... இவனை இழுத்துச் செல்ல முடியவில்லை!
அசையக்கூட இல்லையே?
உடனே மாயாவி காவலாளிகளை தூக்கிப் போட்டார்.
ஆ...! அம்மா...!
ஏய்... அவனை சுட்டுத்தள்ளு!


மாயாவி குறிவைக்கப்பட்டார்
டுமீல்...!
டுமீல்...!
அதற்குள் மாயாவியின் இரட்டைத் துப்பாக்கி அவர்களை பதம்பார்த்தது.

!!
??!!
!
ஆ...! பிடி அவனை!

அவனைக் கொல்லுங்கள்!

அம்மா...!
கும்...!
. மாயாவியின்
அடி ஒவ்வொன்றும்
இடி போல இறங்கியது.
மாயாவி நொடியில் அனைவரை
யும் மூர்ச்சையாகச் செய்தார்.
ஆ
ப்பூ...!
அவ்வளவுதானா?
அதற்குள் கான் தப்பிக்க முயன்றான். அவன் தப்பி ஓடுகிறான்!
என் பின்னே வா!



கான் டயானா இருக்கும் பாதாள அறைக்கு வந்தான்.
மாயாவி பின்தொடர்ந்து வந்து அவனைத் தாக்கினார்.





அலாரம் ஒலித்தது.
அலார மணி ஒலிக்கிறது. இங்கே இருக்கிற ஆயிரக் கணக்கான காவலாளிகள் உம்மை சுற்றி வளைத்து விடுவார்கள்!
நான் சொல்லவில்லை! நீ உயிரோடு திரும்ப முடியாது!
காவலாளிகள் துப்பாக்கியுடன் வந்தார்கள். அதற்குள் மாயாவியும் மற்றவர்களும் மறைந்துகொண்டார்கள்.
என்ன நடந்தது?
தலைவரை எங்கே?
இதோ உங்கள் தலைவர்!

கான் உனக்கு உயிர் வேண்டும் என்றால் துப்பாக்கியை கீழே போடச் சொல்!
கீழே போடுங்கடா!
வீரர்களே! உங்கள் தலைவர் செய்த அட்டூழியத்தை தூதர் இப்போது சொல்வார் கேளுங்கள்!
கான் இந்த பெண்ணை கடத்தி வந்துவிட்டார்! இவர் மக்களுக்கு செய்த கொடுமைகளை இவள் தட்டிக் கேட்டாள்.

அதற்காக அவளை சிறை வைக்க முயன்றார்.
இந்த வாக்கரிடம் ஒரு கோடிக்கு தங்கம் கேட்டு இவளை விற்க முயன்றார்! அதற்காக விமானத்தையே அனுப்பினார்!
இல்லை! அத்தனையும் பொய்!
உக்லாண்டா மக்களை ஏமாற்றி, கொடுமைப்படுத்தியிருக்கிறாய். உன்னை சும்மா விடக் கூடாது!
இல்லை. அத்தனையும் பொய்!
உண்மைதான்! நான்தான் நேற்று இரவு பெட்டியில் தங்கத்துக்கு பதில் புத்தகத்தை அடுக்கினேன்!
நான் அந்த பெட்டியை விமானத்தில் இருந்து இறக்கினேன்! என்ன சுமை!
கேப்டன்! நான் சொல்வது அத்தனையும் உண்மை!
இவனை நான் கைது செய்கிறேன்!

கானை வீரர்கள் முன் நிறுத்தினார்கள்.
வீரர்களே! இவனுக்கு என்ன தண்டனை வழங்கலாம்? சொல் லுங்கள்!
!!
இவனை தூக்கில் தொங்கவிட வேண்டும்!
கேப்டன்! கானை ஐ.நா. சபையில் நிறுத்தி தண்டிக்க வேண்டும்!
அப்பொழுதுதான் இவனைப் போன்ற மற்றவர்கள் திருந்துவார்கள்!
மேடம்! ஒரு சர்வாதிகாரியை, நாட்டுக்கு அடையாளம் காட்டியிருக்கிறீர்கள்!
உண்மையிலேயே நீங்கள் வீரப் பெண்மணி!
எனக்கு எங்கிருந்து இந்த துணிச்சல் வந்தது என்று தெரியவில்லை!
நீ சாதாரண ஆளா? என் மனைவியாயிற்றே!
(முடிந்தது)

கோடை மலர்!

அடுத்த "ராணி காமிக்ஸ்" (மே 1—ந் தேதி) இதழ் கோடை மலராக வெளிவருகிறது!

மாணவ — மாணவிகள் கோடை விடுமுறையைக் குதூகலமாகக் கழிக்க வேடிக்கை வினோத செய்திகள், துணுக்குகள், விளையாட்டுக் கணக்குகள், பரிசு போட்டிகள் போன்றவை கோடை மலரில் இடம் பெறுகின்றன.

80 பக்கம்! ஆனால், விலை ரூ. 3/—

முகமூடிவீரர் மாயாவி தோன்றும் விறுவிறுப்பான மர்மப் படக்கதை இந்தக் கோடை மலரில் இடம் பெறுகிறது!

இப்பொழுதே உங்கள் பிரதிக்கு கடைக்காரரிடம் சொல்லி வையுங்கள்!

மாயக் குதிரை

மாலினி

4

முன்கதை சுருக்கம்:-

மாணிக்கபுரியை பூபதி என்ற மன்னன் ஆண்டுவந்தான். அவனுக்கு மூன்று மகன்கள். திடீரென்று ஒரு நாள் மாயமிருகம் நாட்டுக்குள் புகுந்து பயிரை அழித்து வந்தது. மாயமிருகத்தை தேடி முத்தழகன் புறப்பட்டான்.

சற்று நேரத்தில் வழக்கம் போல ஒளி தோன்றியது. பிறைச் சந்திரன் போல தோன்றிய அந்த ஒளி, பெரிதாகிக்கொண்டே வந்து முழுநிலவு போல ஆகிவிட்டது. அதன் ஒளியும் சூரிய ஒளி போல பிரகாசித்தது! பொன்னழகன் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே இருந்தான்!

அந்த ஒளி சற்று நேரத்தில் வானத்தில் இருந்து பூமியை நோக்கி இறங்கத் தொடங்கியது. விண்ணிலே தோன்றிய மின்னல் மண்ணிலே இறங்குவது போல இருந்தது. ஆனால், மெதுவாக இறங்கி வந்தது.

அதைப் பார்த்ததும், பொன்னழகனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இன்னும் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க, கதிர்களுக்கு இடையே நன்றாகப் பதுங்கிக்கொண்டான். பிரகாசமான ஒளி அவன் கண்களை

கூசச் செய்தது. ஒளியும் நெருங்கி வந்துகொண்டு இருந்தது. ஆகவே, கண்களை மூடிக்கொண்டு, கதிர்களுக்கு இடையே நன்றாக பதுங்கிக்கொண்டான்.

சற்று நேரம் கழித்து, கண்களைத் திறந்து, கதிர்களை மெதுவாக விலக்கிக்கொண்டு பார்த்தான். அவன் கண்களையே நம்ப முடிய வில்லை. பளபள என்று மின்னிய ஒரு குதிரை வயல்களை நோக்கி இறங்கிக்கொண்டு இருந்தது. அந்தக் குதிரைதான் அவ்வளவு பிரகாசமாக இருந்தது. அதன் உடல் பொன்னிறமாக இருந்தது! பசும்பொன் போல மின்னியது! அதன் பிடரி மயிர் அடர்ந்து இருந்தது. அதற்கு ஒரு கம்பீரமான தோற்றத்தைத் தந்தது. அதன் வால் தரையைத் தொட்டுக்கொண்டு நீளமாக இருந்தது. அதன் ஒவ்வொரு கண்ணும் தங்கக் கம்பி போல மின்னியது. அதன் கால்கள் தங்கத்தால் செய்தவை போல பளபளப்பாக இருந்தன. பலத்துடனும், கட்டுக்கோப்புடனும் காணப்பட்டன. குதிரை மிக அழகாக இருந்தது. அவ்வளவு அழகான குதிரையை இந்தப் பூமியில் காணமுடியாது.

வைத்த கண் வாங்காமல் ஆச்சரியத்துடன் அந்தக் குதிரையையே பார்த்துக்கொண்டு இருந்தான், பொன்னழகன். குதிரையைப் பார்த்து விட்டதில் அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஓடிப்போய் அதைப் பிடித்துக்கொள்ள வேண்டும் போல இருந்தது. ஆனாலும், பதறாத காரியம் சிதறாது என்று அமைதியாக இருந்தான். இன்னும் என்ன நடக்கிறது என்று கவனித்துக்கொண்டு இருந்தான்.

வயலில் குதிரை இறங்கியது. கதிர்களுக்கு இடையே பொன்னழகன் பதுங்கியிருப்பதை அது கவனிக்கவே இல்லை. இரண்டு நாளாக மேய்ச்சல் இல்லாததால் பசியுடன் இருந்தது. ஆகவே, வந்ததும் வேகமாகக் கதிர்களை மேயத் தொடங்கியது.

'இந்தக் குதிரைதான் தினசரி இரவில் வந்து மேய்கிறதா!' என்று நினைத்துக்கொண்டான் பொன்னழகன். அதன் கால்கள் தரையில் படாமல் சற்று உயரத்தில் இருந்ததையும் கவனித்தான். 'இன்றைக்கு எப்படியும் இதைப் பிடித்துவிட வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டான். ஆனால், அது மாயக் குதிரை அல்லவா? வானத்தில் இருந்து பறந்து வந்தது போல் மீண்டும் பறந்து போய்விடக் கூடாதே! ஆகவே, அவசரப்படாமல் நல்ல சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து பொறுமையாக இருந்தான்.

குதிரைக்கு நல்ல பசி. வேகமாகக் கதிர்களைத் தின்றுகொண்டு வந்தது. கதிர்கள் நன்றாக விளைந்து, சுவையாக இருந்தன. ஆகவே, குதிரை ஆவலுடன் தின்றது. தின்று தீர்த்துக்கொண்டே வந்தது.

பொன்னழகன் மறைந்து இருந்த இடத்திற்கு அருகில் குதிரை

வந்துவிட்டது. அவனுக்கு ஓரே கொண்டாட்டம்! பாயப்போகும் புலி போல, குதிரையைப் பிடிக்க தயாராக இருந்தான். அதே நேரத்தில் குதிரை மிக அருகில் வந்துவிட்டதால், அதன் கண்ணில்படாமல் கதிர்களுக்கு அடியில் பதுங்கிக்கொண்டான்.

அவன் இருந்ததை குதிரை கவனிக்கவே இல்லை. 'இன்று காவலுக்கு யாரும் இல்லை' என்ற நினைப்புடன் உற்சாகமாக மேய்ந்துகொண்டு இருந்தது.

அவனுக்கு மிக அருகில் வந்துவிட்டது. தலையைக் குனிந்து மேய்ந்துகொண்டு இருந்தது. இதுதான் சரியான சந்தர்ப்பம் என்பதை உணர்ந்தான், பொன்னழகன். கதிர்களுக்கு இடையில் இருந்து புலி போலப் பாய்ந்தான்! ஓரே பாய்ச்சலில் குதிரை மீது ஏறி அமர்ந்து

கொண்டான்.

குதிரை மீது அமர்ந்தபிறகுதான் பொன்னழகனைக் குதிரை பார்த்தது! அவன் பாய்ந்து, அதன் மீது ஏறியதும், இடி விழுந்தது போல இருந்தது! குதிரைக்கு! பயங்கரமாகக் கனைத்தது! அந்த சத்தம் இடியோசை போல இருந்தது! மின்னல் மின்னுவது போல உடலை சிலிர்த்தது! உடனே மேலே எழுந்து வானத்தில் பறக்க ஆரம்பித்தது.

பொன்னழகன் விடவில்லை! குதிரையின் பிடரி முடியை இறுகப் பிடித்துக்கொண்டான். குதிரை பறந்துகொண்டே உடலை எப்படி எப்படியோ உலுக்கியது! அப்பொழுதும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்! குதிரை 'விர்' என்று மேலே பறந்துகொண்டு இருந்தது!

மேலே செல்லச் செல்ல குதிரையின் சக்தி அதிகமாயிற்று. உடலை உலுக்கியதுடன் குட்டிக்கரணமும் அடிக்க ஆரம்பித்தது! பொன்னழகன்பாடு ஒரே ஆபத்தாகப் போய்விட்டது! ஆனாலும் அவன் தைரியத்தைக் கைவிடவில்லை. மன உறுதியோடு இருந்தான். பிடரியை குரங்குப்பிடியாக பிடித்துக்கொண்டான்.

மேகமண்டலத்தைத் தாண்டி குதிரை சென்றது. பொன்னழகனைக் கீழே தள்ள எவ்வளவோ தந்திரம் செய்தது. முன்னும் பின்னும், மேலும் மேலும் விரைந்து சென்றது. உடலை சிலிர்த்தது! குட்டிக்கரணம் அடித்தது! பயங்கரமாகக் கனைத்தது!

'திடீர்' என்று நடனம் ஆட ஆரம்பித்தது. அது நடனமா? கடல் பொங்குவது போல இருந்தது! தலையை விரித்துப் போட்டுக்கொண்டு பெண்கள் பேயாடுவது போல ஆடியது! பம்பரம் போல சுழன்று சுழன்று ஆடியது!

அது ஆடிய ஆட்டத்தில் பொன்னழகனுக்கு மயக்கம் வந்தது. பிடரியைப் பிடித்து இருந்த பிடி நழுவியது. அவனும் நழுவிக் கீழே விழுந்தான்!

குதிரை உற்சாகத்துடன் காற்று வேகத்தில் பறந்தது! ஆனால் பொன்னழகன் விட்டுவிடவில்லை! கையை நீட்டி குதிரையின் வாலை பற்றிக்கொண்டான்! இரண்டு கையாலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்!

(தொடரும்)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

அடுத்த காமிக்ஸ்

கோடை மலர்!

முகமூடிவீரர்

மாயாவி தோன்றும்



மாயக்காரி

மாயக்காரியின் சூழ்ச்சிப் பிடியில் சிக்கிக்கொண்ட மாயாவி எப்படி தப்பினார்?

விறுவிறுப்பூட்டும் படக்கதை!

மே. 1-ந்தேதி வெளிவருகிறது!

அதிக பக்கங்கள்! ஆனால் அதே விலை!

"ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

கே.வி.ஆர் சிம்பிள் ஆர்ட் கோர்ஸ்

மிக எளிய ஸ்ட்ரோக்களில் இப்படி படங்களை சுலபமாய் வரையக் கற்றுக் கொள்ளுங்கள் !



இனி நீங்கள் ஓவியராவதற்கு செலவு ரூ 250/- மட்டுமே

நீங்கள் வீட்டில் இருந்தபடியே ஓய்வு நேரங்களில் படங்கள் வரைய எளிதில் கற்றுக் கொள்ளலாம். கார்ட்டூன்கள், கேரிகேச்சர்கள், ஸ்டோரி இல்லஸ்ட்ரேஷன்கள். இந்த ஆர்ட் கோர்ஸை முடித்தபின் புள்ளிகள் சிறுசிறு கோடுகளில் ட்ரிக் போட்டோகிரபி போல ட்ரிக் ஆர்ட் கோர்ஸைக் கற்றுவிட்ட ஓவியக் கலைக் கோர்ஸ் இது. ரூ 250/- மட்டும் செலவு செய்து நீங்கள் ஓவியராக தனியாக சம்பாதிக்க இது ஒரு சுலபமான வழியாகும். யாருமே பிறக்கும் போதே ஓவியராகி விடுவதில்லை. பழகிப் பழகியே ஒருவர் தம் திறமையைக் காட்ட முடியும். உங்களைச் சிறந்த ஓவியராக்கி விடும் சிம்பிள் ஆர்ட் கோர்ஸ் இதுவே. இதன் வாயிலாக ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு வசமாகப் போகிறது. வாருங்கள், உடனே இந்தக் கோர்ஸில் சேருங்கள். வாழ் நாள் முழுவதும் லாபம் அடையுங்கள்.

5 கோர்ஸ்

1. ஆர்ட் ட்ராயிங் கோர்ஸ்
2. ஆர்ட் கார்ட்டூன் கோர்ஸ்
3. ஈஸி அனாடமி கோர்ஸ்
4. ஜாமெட்ரிகல் ஆர்ட் கோர்ஸ்
5. கமர்ஷியல் ஆர்ட் கோர்ஸ்

இந்தக் கோர்ஸ்கள் எல்லாம் ரூ 250/-க்கே

நீங்கள் ஓவியராவது மிக எளிது ! இந்தக் கூப்பனை நிரப்பி அனுப்பினால் போதும் !

K.V.R. INSTITUTE (Tamil Art Division)

P.B.No. 1020, 77 Habibullah Road T.Nagar CHENNAI - 600 017

எனக்கு கே.வி.ஆர். சிம்பிள் ஆர்ட் கோர்ஸ் ரூ 250/க்கு உடனேயே வி.பி.பி. வாயிலாக அனுப்புங்கள். தபால்காரரிடம் பணம் செலுத்தி உடனேயே கோர்ஸ் புத்தகங்களை வாங்கிக் கொள்கிறேன். நான் எளிதில் ஓவியக் கலையைக் கற்க வேண்டும். விரைவிலேயே நல்ல ஓவியராக ஆகிட விரும்புகிறேன். எனவே கோர்ஸ் புத்தகங்களை அனுப்புவதில் தயவு செய்து தாமதம் செய்ய வேண்டாம்.

முக்கிய செய்தி ☞ கம்ப்யூட்டரில் பத்திரப்படுத்திக் கொள்வதற்காக உங்கள் முழு விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

என் பெயர்: ....

என் முகவரி: ....

.... பின்கோடு



மணிக்கு

மட்டுமே செலவு ! ஆங்கிலத்தை எளிதில் கற்றுக்கொள்ளுங்கள்!

நாம் காலத்தையும் பணத்தையும் பெரிதும் மதிக்கிறோம்

கைமேல் நீங்கள் அடையும் லாபம்

ரூ.99/- விலை மதிப்புள்ள

இனி வெற்றிகளெல்லாம் உங்களதே எனக்கூறும் 7 வார கோர்ஸை இலவசமாக அடைவதன் வாயிலாக

பரிசுபுத்தகங்களின் விவரங்கள்

1. கே.வி.ஆர். இங்கிலீஷ் டிக்ஷ்னரி
   (ஆங்கிலம்-தமிழில் உச்சரிப்பு-தமிழில் அர்த்தம்)
2. வேர்ட் பவர் (ஆங்கிலச்சொற்களின் அற்புத சக்தி)
3. லெட்டர் ரைட்டிங் ப்ராக்டிஸ்
   (ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதும் முறை)
4. அப்ரிவியேஷன்ஸ் டிக்ஷ்னரி
5. வெர்ப்ஸ் டிக்ஷ்னரி
   (வினைச்சொற்களும் அவற்றின் வடிவங்களும்)
6. சிநோநம்ஸ் & ஆண்டனம்ஸ் டிக்ஷ்னரி
   ஆங்கிலச்சொற்களும் அவற்றின் நேர் எதிர்ச்சொற்களும்)

ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் வீதம் ஐந்து மாதங்களில் நீங்கள் எளிதில் ஆங்கிலம் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ள முடியும். இதற்கு ஒரு மணிக்கு கால் ரூபாய் மட்டுமே செலவு. ஆச்சரியப்படுகிறீர்களா ! ஆனால் இது உண்மை. முழுக்கோர்ஸும் 25 புத்தகங்களில் கிடைக்கும். எழுத்து முதல் சொற்களின் உச்சரிப்பு. வாக்கியம் அமைத்தல், இலக்கணம் இங்கிலீஷ் பேசுதல் போன்ற பல நிலைகளை மிகஎளிதாக் மிகமிகச் குறைந்த செலவில் எந்த வயதினரும் வீட்டிலிருந்தபடியே சுலபமாக இங்கிலீஷைக் கற்றுக்கொள்ளப் பயன்படும் பாப்புலர் இங்கிலீஷ் கோர்ஸ் இதுவே. ஒவ்வொரு மாணவனும் மாணவியும் கண்டிப்பாகப் படிக்கவேண்டிய கோர்ஸ் இது. முழுக் கோர்ஸின் கட்டணம் ரூ.150/- (மணிக்குக் கால் ரூபாய் வீதம் தினமும் நான்கு மணிநேரம் படிக்க ஒரே ரூபாய். இப்படி 5 மாதங்களுக்கு ஆவது ரூ.150/- மட்டுமே)

இந்தக்கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள் !

K.V.R INSTITUTE (Tamil Division)
P.B. NO. 1020, 77, Habibullah Road, T. Nagar, MADRAS - 600 017.

எனக்கு கோர்ஸின் எல்லா 25 புத்தகங்களும் மற்றும் 6 பரிசுப்புத்தகங்களும் (1. இங்கிலீஷ் டிக்ஷ்னரி 2. வேர்ட் பவர் 3. லெட்டர் ரைட்டிங் பிராக்டீஸ் 4. அப்ரிவியேஷன்ஸ் டிக்ஷ்னரி 5. வெர்ப்ஸ் டிக்ஷ்னரி 6. சிநோனம்ஸ் & ஆண்டனம்ஸ் டிக்ஷ்னரி ஆகியவற்றுடன் ரூ.99/- விலைமதிப்புள்ள இனி வெற்றிகளெல்லாம் உங்களதே என்றகோர்ஸையும் சேர்த்து) உடனே எனக்கு ரூ.150/ க்கு வி..பி..பி வாயிலாக அனுப்புங்கள். நான் தபால்காரரிடம் பணத்தைச் செலுத்தி அதைப் பெற்றுக்கொள்கிறேன்.

முக்கிய செய்தி ☞ கம்ப்யூட்டரில் பத்திரப்படுத்திக்கொள்வதற்காக உங்கள் முழு விலாசத்தை ஆங்கிலத்தில் எழுதவும்.

என் பெயர் : ....

என் முகவரி : ....

....பின்கோடு

RANI COMICS
TAMIL FORTNIGHTLY

Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

தினத் தந்தி

வழங்கும்
வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக
32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்